www.agaram.lk

 6546

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**15 T I,II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2019 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2019 டிசெம்பர்
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2019**

ක්‍රිස්තියානි ධර්මය I, II
கிறிஸ்தவம் I, II
Christianity I, II

**02. 12. 2019 / 0830 - 1140**

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## கிறிஸ்தவம் I

**கவனிக்க :**
(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** இயேசுவானவரின் பிறப்பு முக்கியமானதாகக் கருதப்படுவது, அது
(1) எதிர்பார்க்கப்பட்டவாறு நடந்தமையாலாகும்.
(2) மக்களின் முன் நடந்தமையாலாகும்.
(3) இறைவாக்கு நிறைவுபெற்றமையாலாகும்.
(4) வெகு காலத்திற்கு முன்னர் இடம்பெற்றமையாலாகும்.

**2.** இறைவாக்கினர் முன் அறிவித்த செய்திகளும் பின்னர் மரியாளுக்கு உரைக்கப்பட்ட வானதூதரின் செய்தியும் இயேசுவானவரின்,
(1) பெரியவராயிருத்தல் மேன்மை பற்றியனவாகும்.
(2) உடற் தோற்றம் பற்றியனவாகும்.
(3) ஏழ்மை பற்றியனவாகும்.
(4) தராதரம் பற்றியனவாகும்.

**3.** இறைவாக்கினரின் கூற்றுப்படி இயேசுவானவரின் திருப்பணி நமக்களிக்கும் சவாலாவது,
(1) பணிகளின் நன்மைகளைப் பெற்றுக்கொண்டு, பிறருக்குப் பணி செய்வதாகும்.
(2) பணிகளின் நன்மைகளைப் பெற்றுக்கொள்வதன்றி பிறருக்குப் பணி செய்வதாகும்.
(3) பணியின் உண்மையான கருத்தைப் பிறருக்குக் கற்றுக்கொடுப்பதாகும்.
(4) பணி செய்வதுடன் அதன் வரையறைகளை விளங்கிக் கொள்வதாகும்.

**4.** பேதுரு, தோமா, மத்தேயு ஆகிய மூவருக்கும் பொதுவான பண்பாவது,
(1) அவர்கள் மீனவர்கள் என்பதாகும்.
(2) இயேசுவானவருடன் கெத்சமனே தோட்டத்தில் இருந்தமையாகும்.
(3) இயேசுவானவர் தோற்றம் மாறியபோது அவருடன் இருந்தமையாகும்.
(4) இயேசுவானவரின் சீடர்களாக இருந்தமையாகும்.

[பக். 2 ஐப் பார்க்க

agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk



**5.** பேதுருவின் முக்கிய அறிக்கை யாது ?
   (1) "நீர் உன்னத கடவுளின் இறைவாக்கினர்."
   (2) "நீர் கடவுளின் மெசியா."
   (3) "உம்முடன் மரிப்பதற்கும் நான் ஆயத்தமாய் உள்ளேன்."
   (4) "உமது வார்த்தையை நான் உலகெங்கும் கொண்டுசெல்வேன்."

**6.** ஒருவர் தன்னைப் பற்றிய அளவுக்கதிகமான மதிப்பீட்டைக் கொண்டிருப்பதிலுள்ள இடரை எடுத்துக்காட்டும் உவமைக் கதை
   (1) பரிசேயனும் வரிதண்டுபவரும்
   (2) செல்வந்தரும் லாசரும்
   (3) போருக்கு ஆயத்தமாகும் அரசன்
   (4) அறிவற்ற செல்வன்

**7.** திருமுழுக்கு யோவான் பற்றிய பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
   A - "அவர் நீதியை நிலைநாட்டுவார்."
   B - "இதோ நான் என் தூதனை அனுப்புகிறேன்."
   C - "மெய்யாகவே அவர் நம் பிணிகளைத் தாங்கிக் கொண்டார்."
   D - "பாலைநிலத்தில்... ஆண்டவருக்கான வழியை ஆயத்தப்படுத்துங்கள்."

   மேற்குறித்தவற்றில் மலாக்கி, எசாயா ஆகிய இறைவாக்கினர் திருமுழுக்கு யோவான் பற்றிக் குறிப்பிட்ட கூற்றுகள் யாவை ?
   (1) A, B
   (2) A, C
   (3) B, C
   (4) B, D

**8.** யூத மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்பவர் இயேசுவானவர் ஆவார் என்பதனை முன்வைத்தவர் யார் ?
   (1) யோவான்
   (2) பேதுரு
   (3) திருமுழுக்கு யோவான்
   (4) செக்கரியா

**9.** இயேசுவைப் பற்றிய நற்செய்தியை வானதூதரின் மூலம் பெற்றுக்கொண்டவர்கள்
   (1) செக்கரியா, மரியா, இடையர்
   (2) செக்கரியா, எலிசபெத்து, யோசேப்பு
   (3) செக்கரியா, யோசேப்பு, சிமியோன்
   (4) செக்கரியா, சிமியோன், அன்னா

**10.** குழந்தை இயேசுவை தேவாலயத்திற்குக் கொண்டுசென்ற நிகழ்வின் மூலம் நாம் கற்றுக்கொள்ளத்தக்க முக்கிய படிப்பினை,
   (1) பெற்றோருடன் மட்டுமே ஆலயம் செல்ல வேண்டும்.
   (2) கடவுளுக்கு முதலிடம் கொடுப்பதற்கு ஆலயம் செல்வது முக்கியமாகும்.
   (3) பாரம்பரியச் சடங்குகளுக்கூடாக கிறிஸ்தவ அடையாளத்தை உறுதி செய்துகொள்ள வேண்டும்.
   (4) கிறிஸ்தவர், இலங்கையர் என்னும் அடையாளத்துடன் வாழ வேண்டும்.

**11.** பின்வருவனவற்றுள் திருமுழுக்கு யோவானின் பணியானது சமகால கிறிஸ்தவர்களுக்கு மிக முக்கியமானதாகும் என்பதை வெளிப்படுத்தும் கூற்றுகள் யாவை ?
   A - நம்மிடம் உள்ளவற்றைப் பகிர்ந்து கொள்ளல் முக்கியமாகும்.
   B - இயேசுவானவரின் பணி பற்றி அவருக்குக் கற்பித்தல்
   C - நன்மை செய்தலின் மூலம் ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்பலாம் என்பதை விளக்குதல்
   D - மக்களைத் தம்மிடம் கவர்ந்துகொள்ளல்
   (1) A, B
   (2) A, C
   (3) B, C
   (4) C, D

**12.** பாடசாலை மாணவராக உமக்கு திருமுழுக்கு யோவான் அளிக்கும் சவால் என்ன ?
   (1) மனந்திரும்புதல்
   (2) மன்னித்தல்
   (3) பொறுமையாய் இருத்தல்
   (4) அன்பு செலுத்துதல்

[பக். 3 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

www.agaram.lk



**13.** ஏரோது அரசன் திருமுழுக்கு யோவானை நிராகரித்தமைக்கான காரணம்,
(1) ஏரோதின் சட்டங்கள் கடினமானவை என்று கூறியமையாகும்.
(2) ஏரோது பணத்தைப் பிழையாக உபயோகித்ததைக் கண்டித்தமையினாலாகும்.
(3) ஏரோது உரோம பேரரசுடன் கிட்டிய உறவு கொண்டிருந்தமையை எதிர்த்தமையாகும்.
(4) ஏரோதின் பிழையான செயலைச் சுட்டிக்காட்டியமையாகும்.

**14.** இயேசுவானவர் பிறந்ததும் வளர்ந்ததுமான நகரங்கள் முறையே,
(1) எருசலேமும் நாசரேத்தும் (2) எருசலேமும் கானானும்
(3) பெத்லகேமும் கானானும் (4) பெத்லகேமும் நாசரேத்தும்

**15.** செபாலயத்தில் இயேசுவானவர் ஆற்றிய முதலாவது பிரசங்கத்தின் தொனிப்பொருள்,
(1) 'யூதருக்கு இறையரசு சொந்தமாகும்'.
(2) 'புறவினத்தவருக்கும் இறையரசு திறக்கப்பட்டுள்ளது'.
(3) 'இறையரசு தெரிவுசெய்யப்பட்டோருக்கு உரியது'.
(4) 'இறையரசுக்கு மகிமை உண்டாகும்'.

**16.** திருமுழுக்கு யோவானையும் இயேசுவானவரையும் தேடி வந்தவர்களுக்கு, அவர்களை இனங்காண்பதற்காகக் கொடுக்கப்பட்ட அடையாளங்களாவன,
(1) பாலைநிலத்தில் ஒலிக்கும் குரலும் ஒட்டகத்தோல் உடையும் ஆகும்.
(2) தீவனத்தொட்டியில் கிடத்தப்பட்ட குழந்தையும் நட்சத்திரமும் ஆகும்.
(3) பாலைநிலத்தில் ஒலிக்கும் குரலும் தீவனத்தொட்டியில் கிடத்தப்பட்ட குழந்தையும் ஆகும்.
(4) தீவனத்தொட்டியில் கிடத்தப்பட்ட குழந்தையும் தூதசேனையும் ஆகும்.

**17.** பின்வரும் கூற்றுகளுள் திருமுழுக்கு யோவானிடமிருந்தும் இயேசுவானவரிடமிருந்தும் நாம் பெற்றுக்கொள்ளும் சிறந்த முன்மாதிரி எது ?
(1) விசேட இறை அடையாளத்தைப் பெற்றுக்கொள்ளும் வரை காத்திருத்தல்
(2) கடின வாழ்வை வாழ்வதற்கு ஆயத்தமாயிருத்தல்
(3) கடவுளின் அபிஷேகத்தைப் பெறும்வரை காத்திருத்தல்
(4) கடின வாழ்வைப் பற்றிச் சிந்தியாமல் இருத்தல்

**18.** சிமியோனும் அன்னாவும் இயேசுவானவரைப் பற்றிக் கூறிய பொதுவான கூற்று யாது ?
(1) மெசியா தரும் மீட்பு
(2) இஸ்ரயேல் மக்களின் மாட்சி
(3) மெசியாவை ஏற்றுக்கொள்ளாதோருக்கு ஏற்படும் வீழ்ச்சி
(4) இயேசுவானவர் எதிர்காலத்தில் செய்யும் தியாக பலி

**19.** பின்வருவன இயேசுவானவர் செபாலயத்தில் மேற்கொண்ட முதல் பிரசங்கத்தில் குறிப்பிட்ட சில முக்கிய கருத்துகளாகும்.

A - ஏழைகளுக்கு நற்செய்தி அறிவித்தல்
B - செல்வந்தர்களுக்குக் கிடைக்கும் ஆசீர்வாதம்
C - வல்லோருக்குக் கிட்டும் அதிகாரம்
D - ஒடுக்கப்பட்டோருக்கு விடுதலை

மேற்குறித்தவற்றுள் இறையரசின் அடையாளங்களை மாத்திரம் உள்ளடக்கியுள்ள கூற்றுகள் யாவை ?
(1) A, B (2) A, C
(3) A, D (4) B, C

**20.** "ஆழத்திற்குத் தள்ளிக்கொண்டுபோய் மீன்பிடிக்க உங்கள் வலைகளைப் போடுங்கள்" என்று இயேசுவானவர் கூறியது,
(1) சீமோனிற்காகும். (2) யாக்கோபிற்காகும்.
(3) யோவானிற்காகும். (4) அந்திரேயாவிற்காகும்.

[பக். 4 ஐப் பார்க்க

agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk



Agaram.LK - Keep your dreams alive!

**21.** சீடர்களை அழைக்கும் நிகழ்விலிருந்து இயேசுவானவர் நமக்குக் கற்பிக்கும் படிப்பினை,
(1) திருப்பணிக்கு அழைக்கப்படுவதற்கு முன்னர் நாமே அதனைத் தெரிவுசெய்தல் வேண்டும்.
(2) பணியின் முக்கியத்துவம் பற்றி பிறருக்குக் கூறுதல் வேண்டும்.
(3) இயேசுவின் திருப்பணியில் பங்காளர்களாதல் வேண்டும்.
(4) இயேசுவின் பணிக்கு யாரையாவது நியமித்தல் வேண்டும்.

**22.** பரிசேயனாகிய சீமோன், மார்த்தா, மரியா, சக்கேயு ஆகியோரின் வீடுகளுக்குச் சென்ற இயேசுவானவர், பிறரை உபசரித்தல் பற்றி எமக்குக் கற்பிப்பது,
(1) பல்வேறு மக்களின் இல்லங்களுக்குச் செல்ல வேண்டும் என்பதையாகும்.
(2) தராதரம் பார்க்காது உறவு ஏற்படுத்துவது முக்கியமானது என்பதையாகும்.
(3) அழைக்கப்படாவிட்டாலும் வீடுகளுக்குச் செல்ல வேண்டும் என்பதையாகும்.
(4) வீடொன்றிற்குள் பிரவேசித்தவுடன் பாரம்பரியங்களுக்கமையச் செயற்பட வேண்டும் என்பதையாகும்.

**23.** இயேசுவானவர் பெண்களையும் சிறுவர்களையும் ஏற்றுக்கொண்டதன் மூலம்,
(1) அவர்களுக்கு நன்மதிப்பைப் பெற்றுக்கொடுத்தார்.
(2) பிறருக்கு மேலாக அவர்களை உயர்த்தினார்.
(3) அவர்கள் எதிர்பாராத அளவிற்குப் பிரபல்யமடைந்தனர்.
(4) பிறருக்குத் தம்மைப் பற்றிக் கூறுவதற்கென அவர்களைப் பயன்படுத்தினார்.

**24.** பரிசேயரும் சதுசேயரும் இயேசுவானவரை ஏன் சந்தித்தனர் ?
(1) இரகசியமாகக் கலந்துரையாடுவதற்காகும்.
(2) அவர்களின் பிரச்சினைகளுக்குக் கடவுளின் வழிநடத்துதலைப் பெற்றுக்கொள்வதற்காகும்.
(3) இயேசுவானவருக்கு சவால் விடுப்பதற்காகும்.
(4) இயேசுவானவருக்கு சத்தியத்தை ஆழமாக விளக்குவதற்காகும்.

**25.** மன்னிப்பளிக்காத பணியாளர் பற்றிய உவமையின் மூலம் இயேசுவானவர் நமக்கு விடுக்கும் சவால்
(1) மன்னிப்பளிப்பதற்கு எப்போதும் முன்வர வேண்டும் என்பதாகும்.
(2) தமக்கு எப்போதும் மன்னிப்புக் கிடைப்பதற்கு வழிசெய்ய வேண்டும் என்பதாகும்.
(3) மன்னிப்பைப் பெறவேண்டுமெனில், பிறருக்கு மன்னிப்பளிக்க வேண்டும் என்பதாகும்.
(4) தம் நண்பர்களுக்கு மன்னிப்பளிப்பதற்கு பின்வாங்கக் கூடாது என்பதாகும்.

**26.** "அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோராவர்" என்ற கூற்றின்படி சமுதாயத்தில் சமாதானத்தை நிலைபெறச் செய்வதற்காக மனிதன்,
(1) அமைதியான பிரசையாக வாழ்வதன் மூலம் திருப்தியடைய வேண்டும்.
(2) நீதியையும் நியாயத்தையும் நிலைநிறுத்த வேண்டும்.
(3) யுத்தமற்ற சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்துதல் வேண்டும்.
(4) தேவைப்படும்போது பலவந்தமாக சமாதானத்தை ஏற்படுத்தும் விதமாகச் செயற்பட வேண்டும்.

**27.** யூத சட்டங்களை உயர்வானதாகக் கருதிச் செயற்பட்டு அதன்மூலம் பிரபல்யமாக முயன்றவர்கள் பற்றி இயேசுவானவரின் பிரதிச்செயல் யாது ?
(1) அவர்களை தேவாலயத்தில் கீழானவர்களாக நோக்குதல்
(2) அவர்களைப் புறக்கணித்தல்
(3) அவர்களை அறியாதவர் போன்றிருத்தல்
(4) கடவுள் முன் அவர்கள் புறக்கணிக்கப்பட்டவர் ஆவர் என எடுத்துக்காட்டுதல்

**28.** தலைமைக் குருக்கள் எச்சமயக் குழுவிலிருந்து நியமிக்கப்பட்டனர் ?
(1) பரிசேயர் (2) மறைநூல் அறிஞர்
(3) சதுசேயர் (4) லேவியர்

**29.** சபத் சட்டத்திற்கமைய இயேசுவானவர் கற்பித்தமைக்கான காரணம்,
(1) சட்டப்படி செயற்படுவது முக்கியமானதெனக் காட்டுவதற்காகும்.
(2) சட்டம் இறைவனிடமிருந்து வருவதால் அது முக்கியமானது எனக் காட்டுவதற்காகும்.
(3) சட்டமானது மனிதருக்குக் காட்டப்படும் அன்பு, இரக்கம் என்னும் அடித்தளத்தில் கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது என்று காட்டுவதற்காகும்.
(4) எவ்வாறேனும் சட்டத்தைக் கடைப்பிடித்தல் யாவரினதும் கடமையாகும் என்று காட்டுவதற்காகும்.

[பக். 5 ஐப் பார்க்க

agaram.lk

www.agaram.lk



**30.** பின்வருவன இயேசுவானவர் அற்புதங்கள் செய்தமை தொடர்பான சில கருத்துகளாகும்.
A - கடவுளின் வல்லமையை விசுவாசத்தின் மூலம் அறிந்துகொள்ளல்
B - இறையரசின் தேவையைக் கொண்டோரில் மாத்திரம் இரக்கம் காட்டுதல்
C - சாத்தானின் வல்லமை செயற்படுகின்றமையை உறுதிப்படுத்துதல்
D - வாழ்க்கையின் போராட்டங்களை வெற்றிகொள்வதற்கு கடவுளின் வல்லமை தேவை எனக் காட்டுதல்
மேற்குறித்தவற்றுள் இறையரசு பற்றிய கருத்துகள் யாவை ?
(1) A, B (2) A, C
(3) A, D (4) B, D

**31.** எதிர்பார்க்கப்பட்ட மெசியாவின் விசேட குணாதிசயம்
(1) அவர் நாசரேத்தில் வளர்க்கப்படுவார்.
(2) அவர் யூதரின் அரசர் ஆகுவார்.
(3) அவர் சிலுவையில் மரிப்பார்.
(4) அவர் 'அமைதியின் அரசர்' என அழைக்கப்படுவார்.

**32.** மேய்ப்பர் பற்றிய சில பண்புகள் கீழே தரப்பட்டுள்ளன.
A - ஆடுகளைப் போசித்து வழிநடத்துதல்
B - எதிரிகளை நோக்கும்போது முதலில் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளல்
C - ஆடுகளைப் பாதுகாத்தலும் தமது வாழ்வை அவற்றுக்கென அர்ப்பணித்தலும்
D - ஆடுகளின் உரோமத்திலிருந்து பயன் பெறுதலும் அவற்றை ஆழமான நீர்நிலைகளைக் கடந்து அழைத்துச்செல்லலும்
மேற்குறித்தவற்றுள் நல்ல மேய்ப்பராகிய இயேசுவானவர் எடுத்துக்காட்டிய பண்புகள் யாவை ?
(1) A, B (2) A, C
(3) B, C (4) B, D

**33.** "என் தீவினை முற்றிலும் நீங்கும்படி என்னைக் கழுவியருளும்; என் பாவம் அற்றுப்போகும்படி என்னைத் தூய்மைப்படுத்தியருளும்" என்ற செபத்தைச் செய்தவர்
(1) எசாயா இறைவாக்கினர் (2) ஆமோஸ் இறைவாக்கினர்
(3) தாவீது அரசன் (4) பவுல் அப்போஸ்தலர்

**34.** தற்கால கிறிஸ்தவர்கள் வறுமை தொடர்பில் கொண்டிருக்க வேண்டிய மனப்பாங்கு
(1) வறுமையானது நிரந்தரமாகச் சமுதாயத்தில் காணப்படும் என்பதனை ஏற்றுக்கொள்ளல்
(2) வறுமையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் வறியவர்களை ஊக்குவித்தல்
(3) வறியவர்களுக்கு அன்னதானம் வழங்குவதன் மூலம் அவர்களை மகிழ்வுறச் செய்தல்
(4) ஏழ்மையிலிருந்து மீள்வதற்கு அவர்களை ஊக்குவித்தல்

**35.** அண்மைக் காலத்தில் எமது நாட்டில் சமாதானத்திற்காகவும் சமூக சேவைக்காகவும் தமது வாழ்வை அர்ப்பணித்தவர்கள்
(1) அருட்தந்தை மைக்கல் ரொட்றிகோ, அருட்தந்தை ஜெராட் டி சில்வா
(2) அருட்தந்தை சந்திரா பர்னாந்து, அருட்தந்தை திஸ்ஸ பாலசூரிய
(3) அருட்தந்தை சந்திரா பர்னாந்து, அருட்தந்தை ஜெராட் டி சில்வா
(4) அருட்தந்தை திஸ்ஸ பாலசூரிய, அருட்தந்தை மைக்கல் ரொட்றிகோ

**36.** எபேசு நகரில் மாயவித்தைகளில் ஈடுபட்டிருந்தோரின் சில செயற்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.
A - அவர்களின் மாயவித்தைப் பட்டியலில் இயேசுவின் அற்புதங்களை உள்ளடக்கியமை
B - மாய வித்தை பற்றிய அனைத்துப் புத்தகங்களையும் எரித்தமை
C - மாய வித்தைப் புத்தகங்களை விற்று, பவுலுக்குப் பணம் கொடுத்தமை
D - இயேசுவை ஏற்றுக்கொண்டு, மாய வித்தைகளைக் கைவிட்டு இயேசுவுக்குச் சான்று பகிர்ந்தமை
மேற்குறித்தவற்றுள் பவுலின் திருப்பணியின் பின்னர் எபேசு மக்களின் செயற்பாடுகளை வெளிப்படுத்தும் கூற்றுகள் யாவை ?
(1) A, B (2) A, D
(3) B, C (4) B, D

[பக். 6 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**37.** புதிய வாழ்வைப் பெற்றுக்கொள்வதற்கு உள்ளார்ந்த மாற்றம் தேவை என இயேசுவானவர் காட்டிய சந்தர்ப்பம்
(1) சமாரிய பெண்ணுடனான உரையாடலின்போது
(2) நிக்கோதேமுவின் வினாவிற்கு பதில் வழங்கியபோது
(3) பரிசேயனாகிய சீமோனின் செயலைக் கண்டித்தபோது
(4) மார்த்தா அவளது வீட்டில் சவாலை எதிர்கொண்டபோது

**38.** இறைவாக்கினர் எசாயாவினால் துன்புறும் பணியாளராக இயேசுவை இனங்காட்டுவதற்குக் காரணமான விசேட குணாதிசயம் **அல்லாதது** யாது ?
(1) பாவங்களை மன்னிப்பதற்கென மரித்தல்
(2) பாவிகள் சார்பில் மத்தியஸ்தம் வகித்தல்
(3) நமது பிணிகளையும் துன்பங்களையும் தாங்கிக்கொள்ளுதல்
(4) மனந்தளர்தலும் கலக்கமுறுதலும்

**39.** திருப்பணியில் ஈடுபட்டிருக்கும்போது பயங்கர தாக்குதல்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டபோதிலும் தவறிழைத்தோர்க்கு மன்னிப்பு வழங்கியோர் யாவர் ?
(1) அருட்தந்தை ஜெராட் டி சில்வா, திருத்தந்தை **II** ஆம் ஜோன் போல்
(2) திருத்தந்தை **II**ஆம் ஜோன் போல், அருட்தந்தை சந்திரா பர்னாந்து
(3) அருட்தந்தை ஜெராட் டி சில்வா, அருட்தந்தை சந்திரா பர்னாந்து
(4) அருட்தந்தை சந்திரா பர்னாந்து, அருட்தந்தை திஸ்ஸ பாலசூரிய

**40.** கிறிஸ்தவக் குடும்பமொன்றின் அங்கத்தவர்கள் என்ற அடிப்படையில் சமுதாயம் தொடர்பான நமது கடமையாக இருக்க வேண்டியது
(1) வேறு கிறிஸ்தவர்களைத் தேடிப்பார்த்து அவர்களுக்கு உதவிசெய்தல்.
(2) கடவுளுக்கு மகிமை கொண்டுவருவதற்கென அனைத்தையும் பொறுமையுடன் மன்னித்துச் செயற்படல்.
(3) இறைவார்த்தையை சமுதாயத்தில் பரப்புவதற்காக ஆர்வத்துடன் செயற்படல்.
(4) சமுதாயத்தில் குறைகளைக் கண்டித்து சரியாக வழிகாட்டுதல்.

* *

[பக். 7 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**15 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2019 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2019 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2019

ක්‍රිස්තියානි ධර්මය I, II
கிறிஸ்தவம் I, II
Christianity I, II

## கிறிஸ்தவம் II

※ **முதலாம்** வினாவிற்கும் மேலும் **நான்கு** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

※ முதலாம் வினாவின் விடைக்கு **20** புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** (i) இயேசுவானவர் ஒரு கழுதைக் குட்டியின்மீது அரச மாட்சிமையுடன் எருசலேமில் பவனி வருவார் என்று உரைத்த இறைவாக்கினரைப் பெயரிடுக. இச்செயலின் மூலம் இயேசுவானவரின் எச்சிறந்த தலைமைத்துவப் பண்பு வெளிப்படுத்தப்படுகிறது ?

(ii) இயேசுவானவர் தமது சீடர்களைத் திருப்பணிக்கு அனுப்பியபோது, அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட **ஓர்** அறிவுரையையும் **ஓர்** அதிகாரத்தையும் எழுதுக.

(iii) இயேசுவானவரின் திருப்பணியின் முக்கிய தொனிப்பொருள் என்ன? அதனை விளக்குவதற்கு இயேசுவானவர் பயன்படுத்திய அணுகுமுறைக்கான **ஓர்** உதாரணத்தைக் குறிப்பிடுக.

(iv) பலன்கொடாத அத்திமரம் பற்றிய உவமையில் இயேசுவானவர் யாரைப் பற்றிக் குறிப்பிடுகிறார்? அதன் மூலம் இறையரசின் பிரசைகளாகிய நாம் பெற்றுக்கொள்ளும் செய்தி யாது ?

(v) யூதரின் பின்வரும் **இரண்டு** மரபுகளினதும் வரலாற்று முக்கியத்துவம் யாது ?

(அ) விருத்தசேதனம்

(ஆ) முதல் ஆண் பிள்ளை அர்ப்பணிப்பு

(vi) (அ) எருசலேம் மாநாட்டில் தலைமைத்துவம் வகித்தவர் யார் ?

(ஆ) எருசலேம் மாநாட்டின் மூலம் புறவினத்தார் பெற்றுக்கொண்ட நன்மை யாது ?

(vii) ஆமோஸ் இறைவாக்கினர் அவரின் காலத்திலே சுட்டிக்காட்டிய அநீதிகள் இன்றைய சமுதாயத்தில் எவ்வாறு காணப்படுகின்றன ?

(viii) I கொரிந்தியர் 13 ஆம் அதிகாரத்தில் காணப்படும் 'அன்பின் கீதம்' மூலம் வெளிப்படும் அன்பின் பண்புகளில் நம் வாழ்வில் பின்பற்ற வேண்டிய **இரண்டு** பண்புகளைக் குறிப்பிடுக.

(ix) பவுலின் முதலாவது பிரயாணத்தின்போது அவருடன் சென்ற **ஒருவரின்** பெயரையும் அப்பிரயாணத்தின்போது பவுல் செய்த ஒரு முக்கிய அற்புதத்தையும் குறிப்பிடுக.

(x) இறையரசின் ஒரு முக்கிய கொள்கையைக் குறிப்பிட்டு, அதனை விளக்குவதற்கு இயேசுவானவர் பயன்படுத்திய ஓர் உவமையை எழுதுக.

**2.** "ஓய்வுநாளும் மானிட மகனுக்குக் கட்டுப்பட்டதே".

(i) மேற்குறித்த கூற்றினைக் கூறுவதற்கு இயேசுவானவரைத் தூண்டிய பின்னணி யாது ?

(ii) இயேசுவானவர் நியாயச்சட்டங்களையும் பாரம்பரியங்களையும் விட மனிதர்கள் முக்கியமானவர்கள் என்பதனைக் காட்டுவதற்கெனப் பயன்படுத்திய **மூன்று** சந்தர்ப்பங்களைச் சுருக்கமாக முன்வைக்குக.

(iii) இயேசுவானவரின் முன்மாதிரியைப் பின்பற்றி இன்றைய சமுதாயத்தில் நீதிநியாயத்தையும் சமூக நலன்புரிச் செயல்களையும் செய்வதற்கு கிறிஸ்தவர்களாகிய நாம் மேற்கொள்ளக்கூடிய **ஐந்து** வழிமுறைகளை விளக்குக.

[பக். 8 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**3.** (i) இறையரசின் பிரசைகளிடமிருந்து இயேசுவானவர் எதிர்பார்க்கும் **இரண்டு** விசேட குணாதிசயங்களை எழுதுக.

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்ட ஒரு குணாதிசயத்தை விளக்குவதற்கு இயேசுவானவர் கூறிய **ஓர்** உவமைக் கதையைச் சுருக்கமாக முன்வைக்குக.

(iii) இயேசுவானவரால் உவமைகளின் வழியாக முன்வைக்கப்பட்ட இறையரசின் பிரசைகளில் காணப்பட வேண்டிய **ஐந்து** குணாதிசயங்களை விளக்குக.

**4.** பிள்ளைகள் கடவுளின் ஈவு என்று திருமறை கூறுகிறது.

(i) இயேசுவானவரின் காலத்தில் யூத சமுதாயத்தில் பிள்ளைகளின் நிலை என்னவாக இருந்தது ?

(ii) இயேசுவானவர் பிள்ளைகளின் பெறுமதி பற்றி தம் சீடர்களுக்கு விளக்கிக் கூறிய **மூன்று** நிகழ்வுகளை முன்வைக்குக.

(iii) தற்கால சமூகத்தில் காணப்படும் **ஐந்து** சிறுவர் துஷ்பிரயோகங்களைப் பட்டியற்படுத்தி, அவ்வாறான நிலைமைகளைத் தவிர்ப்பதற்கும் பாதிக்கப்படுவோருக்கு உதவி வழங்குவதற்கும் கிறிஸ்தவர்களான நாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் **ஐந்தினை** முன்மொழிக.

**5.** பவுல் அடிகளார் சிறப்புத் திருப்பணியொன்றை மேற்கொண்ட தலைவராகக் கருதப்படுகிறார்.

(i) திருத்தூதுப் பயணங்களை மேற்கொள்வதற்கு புனித பவுலைத் தெரிவுசெய்து அனுப்பிய திருச்சபை எங்கே அமைந்திருந்தது ? இதற்காகத் திருச்சபையினர் எவ்வாறு வழிநடத்தப்பட்டனர் ?

(ii) பவுலினால் வெளிப்படுத்தப்பட்ட விசேட தலைமைத்துவப் பண்புகள் **மூன்றை** உதாரணங்களுடன் முன்வைக்குக.

(iii) உங்களுக்குப் பாடசாலையின் தலைமைத்துவப் பொறுப்பொன்று கிடைக்கப்பெற்றால், மேலே (ii) இல் குறிப்பிடப்பட்ட தலைமைத்துவப் பண்புகளை எவ்வாறு பின்பற்ற எதிபார்க்கின்றீர்கள் என்பதனை விளக்குக.

**6.** (i) ஆதி கிறிஸ்தவ திருச்சபையில் காணத்தக்கதாய் இருந்த சிறப்பான விழுமியங்கள் **இரண்டை** எழுதுக.

(ii) ஆதி கிறிஸ்தவ திருச்சபை சவால்களுக்கு முகங்கொடுத்து நீதிக்கும் சமூக நலனோம்பலுக்காகவும் செயற்பட்ட சந்தர்ப்பங்கள் **மூன்றை** எழுதுக.

(iii) ஆதி கிறிஸ்தவ திருச்சபையின் விழுமியங்களை இன்றைய திருச்சபை எவ்வாறு முன்கொண்டு செல்லலாம் என்பதற்குப் பொருத்தமான **ஐந்து** வழிமுறைகளைச் சுருக்கமாக விளக்குக.

**7.** பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டிற்கு** திருமறைக் கற்பித்தலின் அடிப்படையில் சிறுகுறிப்பு எழுதுக.

(i) கிறிஸ்தவ ஒற்றுமை

(ii) சவால்களின் மத்தியில் பணிபுரிதல்

(iii) துன்புறுதல் பற்றிய கிறிஸ்தவ மனப்பாங்கு

(iv) பணியாள் தலைமைத்துவம்

* * *

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

PAST PAPERS WIKI

ප්‍රශ්නපත්‍ර පොත්

ගෙදරටම ගෙන්වා ගන්න

ඔන්ලයින් ඕඩර් කරන්න

www.store.pastpapers.wiki

වෙත යන්න

BUY NOW

Secure Payments By PayPal VISA NO PAYPAL ACCOUNT NEEDED!

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

ONLINE BOOK STORE

An evening of fun for young readers



agaram.lk